# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 25 செவ்வாய்க்கிழமை 09.09.2025 கதிர் 304







## பாதாள உலக கும்பல்களுடன் தொடர்புடையவர்கள்: அம்பலப்படுத்தவுள்ள அமைச்சர்



கொழும்பு, செப் .09


குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலக கும்பல்களுடன்தொடர்புகளை பேணிவந்த அரசியல்வாதிகள், பெயர் பட்டியலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க NPP அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசியல்வாதிகள் , முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களின் பாதாள உலக கும்பல்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து கடந்த சில நாட்களாக கடுமையான விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாதாள உலக கும்பல்களுடன் தொடர்புகளை பேணி வந்த அரசியல்வாதிகள் தொடர்பில் நாடாளு மன்றத்தில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க திட்ட மிட்டுள்ளார்.

அதன்படி கெஹெல்பத்தர பத்மே , கொமாண்டோ சலிந்த மற்றும் பாணந்துறை நிலங்க உள்ளிட்ட 6 பேர் அடங்கிய பாதாள உலக கும்பல் ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட நிலையில் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செம்மணி வழக்கில் பெரும் எதிர்பார்ப்பு!



யாழ்ப்பாணம், செப். 09

செம்மணிப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 18ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெறஉள்ளது.

கடந்த வழக்குத் தவணையின்போது மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளுக்கான பட்ஜட்டை சமர்ப்பிக்குமாறும், நிபுணர்களின் இடைக்கால அறிக்கையையும் நீதவான் கோரியிருந்தார்.

இந்த விடயங்கள் எதிர்வரும் வழக்குத் தவணையின்போது முன்வைக்கப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகள் நிறைவடைந்த பின்னர் நடைபெறும் முதலாவது நீதிமன்ற நடவடிக்கை என்பதாலும், எதிர்வரும் வழக்குத் தவணையில் பெரும் எதிர்பார்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

## பலப்பிட்டியில் துப்பாக்கி சூடு



கொழும்பு, செப் .09

பலப்பிட்டிய, ஹீனட்டிய வீதியின் பெட்டிவத்த பகுதியில் செவ்வாய்க்கிழமை மதியம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து வைத தியசாலையில

7➤

## ராஜிதவுக்கு நிபந்தனை பிணை



கொழும்பு, செப் .09

கிரிந்த மீன் பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வுத் திட்டத்தின் மூலம் அரசு நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் வழக்கில் முன்னாள் மீன்வள அமைச்சர்

7➤

## கெஹெலிய, குடும்பத்தினருக்கெதிரான விசாரணைகள் நிறைவு



கொழும்பு, செப் .09

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகளை கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம இன்று முடிவுக்குக் கொண்டுவந்தார்.

பணமோசடி குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகைகளை அவர்கள் எதிர்கொண்டனர்.

## 2026 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி




கொழும்பு, செப் .09


2026 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை தயாரிப்பதற்காக கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள 2026 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச்

7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# மனித புதைகுழி விவகாரம் சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாக இடம்பெற வேண்டும் – பிரித்தானியா



கொழும்பு, செப் .09

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60வது கூட்டத் தொடரில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை குறித்து பிரித்தானியா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உயர் ஸ்தானிகரின் அண்மைய இலங்கை விஜயம் மற்றும் அறிக்கைக்கு பிரித்தானியா தமது நன்றியை தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் குறித்த அரசாங்கத்தின் உறுதிப்பாடுகளை வரவேற்கும் அதேவேளை உறுதியான மற்றும் நிலையான முன்னேற்றத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில்புதிதாககண்டுபிடிக்கப்பட்டுள்ள பாரியபுதைகுழிகளைதோண்டிஎடுத்துவிசாரணை செய்வதற்கான இலங்கை அதிகாரிகளின் நடவடிக்கை மிக முக்கியமானதோடு, அதனை சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட வேண்டும்என பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.

தன்னிச்சையான தடுப்புக்காவல், காவலில் வைக்கப்பட்ட மரணங்கள், மனித உரிமை பாதுகாவலர்களை அச்சுறுத்துதல் மற்றும் சிறுபான்மை சமூகங்களை குறிவைத்தல் ஆகியவை குறித்த உயர் ஸ்தானிகரின் தொடர்ச்சியான கவலைகளை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற சட்டங்களை ஒழிக்க பொதுமக்களுக்கு உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அடிப்படை சுதந்திரங்களை கட்டுப்படுத்த தொடர்ந்து அந்த சட்டத்தை பயன்படுத்துவது குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

இழப்பீடுகள்மற்றும்காணாமல்போனவர்களை மையமாகக்கொண்ட உள்நாட்டுநிறுவனங்களின் பணிகளை மீண்டும் ஊக்குவிக்கவும் நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

எந்தவொருநல்லிணக்கமும்பொறுப்புக்கூறல் செயல்முறையும் உள்ளடக்கியதாகவும் விரிவானதாகவும் இருப்பது, பாதிக்கப்பட்ட சமூகங்களின் ஆதரவைக் கொண்டிருப்பது, கடந்தகால பரிந்துரைகளை உருவாக்குவது மற்றும் சர்வதேச தரங்களை பூர்த்தி செய்வது மிகவும் முக்கியமாகும்.

அதேநேரம் மோதல் தொடர்பான பாலியல் வன்முறை குறித்த உங்கள் அலுவலகத்தின் முக்கியமான பணியை முன்னெடுத்துச் செல்லவும் ஐ.நா மனித உரிமைப் பேரவையின் உயர்ஸ்தானிகரிடம்பிரித்தானியா கோரியுள்ளது.

மேலும் இந்தப் பிரச்சினை இலங்கையில் முன்னுரிமைப்பிரச்சினையாகக் கவனிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைகளில் அரசாங்கத்துடன் ஆக்கப்பூர்வமாகப் பணியாற்ற விருப்பம் கொண்டுள்ளதாகவும்பிரித்தானியாவெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஐ)



# மருந்து தட்டுபாடு தொடர்பில் சுகாதார அமைச்சர் வெளியிட்ட கருத்து



கொழும்பு, செப் .09

ஒரு குறிப்பிட்ட வைத்தியசாலையில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு பற்றாக்குறை ஏற்படுமாயின் அது நிதி பற்றாக்குறையால் ஏற்பட்ட தட்டுபாடு அல்ல மாறாக அவற்றை கொள்முதல் செய்வதில் ஏற்பட்டும் செயன்முறை சிக்கல் காரணமாகவே மருந்துகளுக்கும் மருத்துவ உபகரணங்களுக்கும் தட்டுபாடு ஏற்படுகிறது என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பல் அறுவைசிகிச்சை வைத்தியர்களுக்கான வரையறுக்கப்பட்ட வழிமுறைபயிற்சிக்காக சுகாதார அமைச்சால் 86 பேர் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேற்படி பல் மருத்துவ பட்டதாரிகளை வரையறுக்கப்பட்ட வழிமுறைபயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நியமனக் கடிதங்கள் நேற்று (8) கொழும்பில் உள்ள ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது அமைச்சர் உறையாற்றுகையில், இந்த நாட்டு மக்களின் சுகாதார சேவைகளை மேம்படுத்த ஒவ்வொரு துறையையும் அறிவியல் ரீதியாகவும் முறையாகவும் நிறுவகிக்க அவசியமான திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு முதல் பல பல் அறுவைசிக்சை பட்டதாரிகள் வரையறுக்கப்பட்ட வழிமுறைபயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். பயிற்ச்சியை நிறைவு செய்தவர்களுக்கு உடனடியாக நியமனங்களை வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். சுகாதார சேவைக்கான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வித தாமதமும் இன்றி வழங்கப்படும் என உறுதியளிக்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட வைத்தியசாலையில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு பற்றாக்குறை ஏற்படுமாயின் அது நிதி பற்றாக்குறையால் ஏற்பட்ட தட்டுபாடு அல்ல மாறாக அவற்றை கொள்வனவு செய்வதில் ஏற்பட்டும் செயன்முறை சிக்கல் காரணமாகவே மருந்துகளுக்கும் உபகரங்களுக்கும் பற்றாக்குறை ஏற்படுகிறது என்றார். (ஐ)

## பயத்தின் உச்சத்தில் நாமல்



ஊடகவியலாளர்கள்எழுப்பும்கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உச்ச பயத்தில் இருப்பதாகவும்எனவே அவரது முகபாவனையை கவனிக்குமாறும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

அவரது உரையின் போது, கமரா அவரைக் காட்டும் போது, அவர் வியர்த்துக் கொண்டிருப்பதையும், அவரது கண்களில் பயம் வெளிப்படுவதையும் நீங்கள் காணலாம்.

அந்த முகபாவங்கள் இருந்தபோதிலும், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் தான் பயப்படவில்லை என்று தெரிவிக்கிறார், என்று கருணாரத்ன ஒரு நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

மேலும் சமீபத்திய சம்பவங்கள் தொடர்பாக பல பிரச்சினைகள் வெளிப்படுவதாக பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த நாடு போதைப்பொருள் கடத்தலில் தொடர்ந்து முன்னேறினால், நமது குழந்தைகளின் எதிர்காலம் அழிக்கப்படும் என்று அவர் எச்சரித்தார்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஒருவரின் பதவிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கைதுகள் பல சட்டவிரோத நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அந்த நேரத்தில், போதைப்பொருட்களைப் பார்த்திராத அல்லது பயன்படுத்தாத இளைஞர்கள் கூட நியாயமற்ற முறையில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர், என்று நாமல் கருணாரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## இலங்கை தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்

கொழும்பு, செப் .09

வெளிநாடுகளில் அனர்த்தங்களை எதிர்கொள்ளும் இலங்கை தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஜனாதிபதி நிதியத்தினால் புலமைப்பரிசிலை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் இறக்கும், ஊனமுற்ற மற்றும் வெளிநாடுகளில் காணாமல் போதல் உள்ளிட்ட பல்வேறு அனர்த்தங்களினால் பாதிக்கப்படும்இலங்கையர்களின்பிள்ளைகளின் கல்வியைப் பாதுகாப்பதற்காக புலமைப்பரிசில் திட்டமொன்றைச் செயல்படுத்த ஜனாதிபதி நிதியம் திட்டமிட்டுள்ளது.

“கல்வியில் யாரையும் கைவிடக் கூடாது” என்ற எண்ணக் கருவின் பிரகாரம் ஜனாதிபதி நிதியம்,வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்என்பன இணைந்து இந்தத்திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை விரிவுபடுத்துவது குறித்த கலந்துரையாடல் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஜனாதிபதியின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர் மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரின் தலைமையில் அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன் போதே இந்த திட்டம் தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் இலங்கை தொழிலாளர் களுடைய இலங்கையில் இருக்கும் பிள்ளைகளின் பாடசாலைக் கல்வி மற்றும் பல்கலைக்கழகக் கல்வியை உறுதிப்படுத்துவது இந்தத்திட்டத்தின் நோக்கமாகும்.

சம்பந்தப்பட்ட நபர் இலங்கையர் என்பது மாத்திரமே அளவுகோளாக கருத்திற்கொள்ளப்படுவதோடு குறித்த, புலமப்பரிசில் வழங்குவதற்கான பொருத்தமான வழிகாட்டுதல்கள் எதிர்வரும் தினங்களில் வெளியிடப்பட உள்ளன .

காட்டு யானைகளின் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் பிள்ளைகளுக்கு இதேபோன்ற புலமைப்பரிசில் திட்டத்தை ஜனாதிபதி நிதியம் ஏற்கனவே அறிமுகப்படுத்தியுள்ளது.

எதிர்காலத்தில் இதை மேலும் பல துறைகளுக்கும் விரிவுபடுத்த ஜனாதிபதி நிதியம் எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம்




பட்டதாரி நியமனத்தில் உள்ளிர்க்கப்பட்டு பாடசாலைகளில் கற்பித்தலில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

தங்களை ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் ஆர்ப்பாட்டம் யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்று இடம்பெற்றது. (ஐ)

## பிரதேச சபை உறுப்பினர் போதைப்பொருள் வியாபாரம்

கடந்தகால அரசாங்கதத்தின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருக்கும் போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்பு என தெரியவருகின்றது என்று வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவிததார்.

தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்,


எங்களது செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தப்பிச் சென்ற குறற்வாளிகளை சர்வதேச பொலிஸார் மற்றும் வெளிநாடுகளின் உதவியுடன் கைது செய்து எமது நாட்டிற்கு கொண்டுவந்து விசாரணை செய்ததன் மூலமாக போதைப்பொருள் உற்பத்தி நிலையங்களை கண்டுபிடித்துள்ளோம்.

இவ்வாறான சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களிற்கு எதிராக சட்டத்துக்குட்பட்டு, நீதியான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு பொலிஸார் மற்றும் புலனாய்வு துறை யினருக்கு பூரண சுதந்திரத்தை வழங்கியதன் மூலமாக இவ்வாறானவர்களை தொடர்ச்சியாக கைதுசெய்து வருகின்றோம்.

மேலும் குறித்த போதைப்பொருள் தொடர்பான ஆரம்ப கட்ட விசாரணையின் போது அரசியல்வாதிகளும், கடந்த காலத்திலே ஆட்சிபுரிந்த அரசியல்வாதிகளும் சம்பந்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வருகின்றன. இதேவேளை கடந்த கால அரசாங்கத்தினுடைய தொடர்புபட்ட முன்னாள் பிரதேசசபை உறுப்பினரும் தொடர்புபட்டதாக அறிய முடிகின்றது என்றார்.

(ஐ)

# கிரேட் நிகோபார் திட்டத்தால் ஷோம்பென்ஸ் பூர்வகுடி பகுதிகள் அழியும் நிலை: சோனியா காந்தி எச்சரிக்கை



அந்தமான் நிகோபார் தீவில் அமைய உள்ள கிரேட் நிகோபார் திட்டத்தால் சுற்றுசூழல் பேரழிவை ஏற்படுத்த கூடியது என்று காங்கிரஸ் நாடாளுமன்ற குழு தலைவர் சோனியா காந்தி எச்சரித்துள்ளார். அந்தமான் நிகோபார் யூனியன் பிரதேசத்தில் கிரேட் நிகோபார் தீவு உள்ளது. இங்கு ரூ.72,000 கோடி மதிப்பில் மிகப்பெரிய உள்கட்டமைப்பு திட்டத்தை அந்தமான் நிகோபார் தீவுகளில் ஒருங்கிணைந்த வளர்ச்சி கழகம் மேற்கொள்ள உள்ளது. இதில் துறைமுகம், சர்வதேச விமான நிலையம், சிறு நகர்ப்பகுதி, மின் உற்பத்தி நிலையம் ஆகியவை அமைக்கப்பட உள்ளன. ஆனால் இந்த உட்கட்டமைப்புகள் அமையும் இடம் நிக்கோபாரிஸ் சோம்பென்ஸ் பழங்குடியின மக்கள் வாழும் இடங்கள் ஆகும்.

எனவே இந்த திட்டத்தால் நிகோபார் தீவு மக்களுக்கும் சுற்றுசூழலுக்கும் பல பிரச்சனைகள் ஏற்படும் என்று சோனியா காந்தி குற்றம் சாட்டியுள்ளார். 2004ம் ஆண்டு இந்திய பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமியின் போது நிக்கோபாரிஸ் பூர்வகுடி மக்கள் தங்கள் கிராமங்களில் இருந்து தாற்காலிகளாக வெளியேறும் நிலை ஏற்பட்டது. ஆனால் கிரேட் நிகோபார் திட்டம் வந்தால் அவர்கள் நிரந்தரமாக வெளியேற்றப்பட்டு தங்களது கிராமங்களுக்கு திரும்புவது கனவாகவே மாறிவிடும் என்று எச்சரித்துள்ளார். பெரும் வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தும் போது பழங்குடியினரின் நலனுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற தெரிவித்துள்ள சோனியா காந்தி கிரேட் நிகோபார் திட்டம் சோம்பென்ஸ் மக்கள் வசிக்கும் பகுதிகளை அளிப்பதை தான் குறிக்கோளாக கொண்டுள்ளது என சாடியுள்ளார்.

குறிப்பாக தீவுக்கு சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரித்து இறுதியில் பூர்வகுடி மக்களை அப்புறப்படுத்துவது தான் இந்த திட்டத்தின் நோக்கம் என்று அவர் விமர்சித்துள்ளார். இந்த திட்டம் குறித்து தேசிய பட்டியல் பழங்குடியினர் ஆணையத்துடன் கலந்தாலோசிக்கவும் இல்லை. பூர்வகுடி மக்களின் கருத்தை கேட்கவும் இல்லை என்றும் சோனியா காந்தி குற்றம் சாட்டியுள்ளார். பூர்வகுடிகளுக்கு மட்டும் இன்றி சுற்றுசூழலுக்கும் பேரழிவு காத்திருப்பதாகவும் அவர் எச்சரித்துள்ளார். இந்த திட்டத்துக்காக தீவின் 15மூ நிலத்தில் உள்ள மரங்களை வெட்ட வேண்டி இருக்கும் என குறிப்பிட்டுள்ள அவர் இதற்காக 32 லட்சம் முதல் 58 லட்சம் வரை மரங்கள் வெட்டப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார். இதனால் ஏராளமான வன விலங்குகள் அழியும் நிலை ஏற்படும் என வேதனை தெரிவித்துள்ளார். கிரேட் நிகோபார் திட்டத்துக்கு எதிராக அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என்றும் சோனியா காந்தி வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# விலகுவதற்கு நான் காரணமா? நயினார் நாகேந்திரன் பேட்டி



தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகிட நான்தான் காரணம் என டிடிவி தினகரன் சொல்வது எனக்கு விளங்கவில்லை என்று நெல்லையில் பாஜ மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார். பாளையங்கோட்டை அன்புநகரில் பாஜ மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டி: அதிமுக கட்சியில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்பதை நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். இதுதொடர்பாக பல தலைவர்களிடம் பேசி உள்ளேன். அதிமுக ஒன்றிணைந்து வருகின்ற சட்டசபை தேர்தலில், எங்கள் கூட்டணி வெற்றி பெற பாடுபட வேண்டும். டெல்லி தலைமையோடு பேசி அனைவரையும் ஒன்றிணைக்க முடிவு எடுக்கப்படும். 2001ல் நடந்த சட்டசபை தேர்தலில் என் போன்றவர்கள் அரசியலில் முக்கிய இடம் பெற்றதற்கு டிடிவி தினகரனுக்கு முக்கிய பங்குண்டு.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அமமுக எங்களுடன் கூட்டணியில் இருந்தது. தொடர்ந்து அவர்கள் எங்களுடன் இருப்பார்கள் என கூறியிருக்கிறேன். பலமுறை தினகரனோடு தொலைபேசியிலும் பேசியிருக்கிறேன். அப்போது எல்லாம் கூட்டணி தொடர்பாக அவர் எந்தவித கருத்துகளையும் தெரிவிக்கவில்லை. தற்போது திடீரென விலகுவதற்கு நயினார் நாகேந்திரன் தான் காரணம் என்கிறார். நயினார் நாகேந்திரன் அகங்காரத்தில் செயல்படுகிறார் என்று எதன் அடிப்படையில் கூறியிருக்கிறார் என தெரியவில்லை. நெல்லை பாஷையில் நான் சொல்வதென்றால் ‘எனக்கு விளங்கல’. பசும்பொன் முத்துராமலிங்க தேவருக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

செங்கோட்டையனுக்கு பாஜவில் சேர அழைப்பா?

அதிமுக பொறுப்புகளில் இருந்து நீக்கப்பட்டுள்ள செங்கோட்டையனிடம் பாஜ ஒன்றும் பேசவில்லை. ஒரு கட்சியுடன் கூட்டணியில் நாங்கள் இருக்கும்போது செங்கோட்டையனை நாங்கள் அழைப்பது நாகரிகமாக இருக்காது’ என்று நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

கன்னியாகுமரி கடலில் 3 மணி நேரம் தியானம்

பாஜ மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று முன்தினம் இரவு திடீரென கன்னியாகுமரி வந்தார். திரிவேணி சங்கமத்தில் நீராடிய அவர், கடலில் இடுப்பளவு தண்ணீரில் நின்றவாறு சுமார் 3 மணி நேரம் கண்களை மூடி தியானம் செய்தார். நேற்று முன்தினம் சந்திர கிரகணம் என்பதால், கிரகணம் தொடங்கிய சிறிது நேரத்தில், மந்திரங்களை கூறி தியானத்தை தொடங்கிய அவர், கிரகணம் முடியும் வரை கடலில் நின்று தியானத்தை முடித்தார். பின்னர் நேற்று அதிகாலை அவர் கன்னியாகுமரி பகவதியம்மன் கோயிலில் தரிசனம் முடித்து விட்டு புறப்பட்டு சென்றார். (ஐ)

# எம்பிக்கள் ரகசிய ஓட்டுப்பதிவு: துணை ஜனாதிபதி பதவிக்கு இன்று தேர்தல்

துணை ஜனாதிபதி பதவிக்கு இன்று வாக்குப்பதிவு நடக்கிறது. எம்பிக்கள் ரகசிய முறையில் ஓட்டு போடுகிறார்கள். துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் கடந்த ஜூலை 21ஆம் தேதி உடல்நலக்குறைவை காரணம் காட்டி பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து புதிய துணை ஜனாதிபதியை தேர்வு செய்யும் தேர்தல் இன்று நடக்கிறது. கடந்த 2022ஆம் ஆண்டு நடைபெற்ற துணைஜனாதிபதி தேர்தலில், பாஜ தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட ஜெகதீப் தன்கர் 528 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மார்கரெட் ஆல்வா 182 வாக்குகளைப் பெற்றார்.

இன்று நடைபெற உள்ள 17வது துணை ஜனாதிபதி தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் மகாராஷ்டிராவின் ஆளுநரும், தமிழ்நாட்டை சேர்ந்த பாஜ மூத்த தலைவருமான சி.பி.ராதாகிருஷ்ணனும், எதிர்க்கட்சிகளின் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் உச்ச நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி பி.சுதர்சன் ரெட்டியும் போட்டியிடுகின்றனர்.

இந்தத் தேர்தல் ரகசிய வாக்கெடுப்பு முறையில் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் கட்சிக் கொறடாவின் உத்தரவு பொருந்தாது என்பதாலும், தங்களது நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் செல்லாதவையாக மாறிவிடக் கூடாது என்பதிலும், மாற்றி வாக்களிப்பதைத் தடுப்பதிலும் ஆளுங்கட்சி தரப்பும், எதிர்கட்சி தரப்பும் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. இதற்காக, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகளை அளித்துள்ளன.

தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில், ‘நாடாளுமன்ற பயிலரங்கம்’ என்ற பெயரில் இரண்டு நாள் பயிற்சி முகாம் டெல்லியில் நடத்தப்பட்டது. வாக்குப்பதிவு நடைமுறைகள் குறித்து ‘இந்தியா’ கூட்டணியின் எதிர்க்கட்சி எம்பிகளுக்கு விளக்குவதற்காக சிறப்பு ஆலோசனைக் கூட்டம் நேற்று நடந்தது. எதிர்கட்சிகளின் 315 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் (மக்களவை 234, மாநிலங்களவை 81) மாதிரி வாக்குப்பதிவுப் பயிற்சி வழங்கப்பட்டது.

இதன் மூலம், ரகசிய வாக்கெடுப்பில் வாக்குகள் சிதறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திரிணாமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகளின் முழுமையான ஆதரவு தங்களுக்கு இருப்பதாக ‘இந்தியா’ கூட்டணித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். துணைஜனாதிபதி தேர்தலில், மக்களவை மற்றும் மாநிலங்களவையைச் சேர்ந்த 781 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

தேர்தலில் வெற்றி பெறுவதற்கு 392 வாக்குகள் தேவை. தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 427 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதால், அதன் வேட்பாளர் சி.பி.ராதாகிருஷ்ணன் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. இருப்பினும், ரகசிய வாக்கெடுப்பு என்பதால், இறுதி முடிவுகள் எதிர்பார்ப்புகளை மாற்றியமைக்கக் கூடும் என்ற விறுவிறுப்பு நிலவுகிறது.

இன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் வாக்குப்பதிவு நடைபெறும். இன்று மாலை 6 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கி, முடிவுகள் உடனடியாக அறிவிக்கப்படும் எனத் தேர்தல் அதிகாரியும், மாநிலங்களவையின் பொதுச் செயலாளருமான பி.சி. மோடி தெரி வித்தார்.

பிஆர்எஸ், பிஜு ஜனதா தளம் புறக்கணிப்பு

ஒடிசாவின் பிரதான எதிர்க்கட்சியும், முன்னாள் முதல்வர் நவீன்பட்நாயக் தலைமையிலான பிஜு ஜனதா தளம் கட்சியும், தெலங்கானா முன்னாள் முதல்வர் சந்திரசேகர ராவ் தலைமையிலான பிஆர்எஸ் கட்சியும் துணை ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்துள்ளன.

துணை ஜனாதிபதி தேர்தலுக்கான தேர்தலில் 788 எம்பிக்கள் வாக்களிக்க தகுதியானவர்கள்.

இதில் மாநிலங்களவை எம்பிக்கள் 245 பேர் மற்றும் மக்களவை எம்பிக்கள் 543 பேர்.

மாநிலங்களவையின் நியமன எம்பிக்கள் 12 பேரும் இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள்.

மாநிலங்களவையில் 6 இடங்களும், மக்களவையில் ஒரு இடமும் காலியாக இருப்பதால் 781 எம்பிக்கள் ஓட்டு போட தகுதியானவர்கள்.

பலம் என்ன?

துணை ஜனாதிபதி தேர்தலில் மொத்தம் 781 எம்பிக்கள் இன்று ஓட்டு போட உள்ளனர்.

தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 427 எம்பிக்கள் ஆதரவு உள்ளது.

இந்தியா கூட்டணிக்கு 315 எம்பிக்கள் ஆதரவு உள்ளது.

25 சட்ட வல்லுநர்கள் சுதர்சன்ரெட்டிக்கு எதிர்ப்பு

துணை ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு கேட்டு பீகார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத்தை சந்தித்ததற்காக இந்தியா கூட்டணி வேட்பாளர் சுதர்சன் ரெட்டியை 25 சட்ட வல்லுநர்கள் விமர்சித்துள்ளனர். அதில் பீகார் மாநிலத்தின் பொது நிதி ரூ.940 கோடி மோசடி செய்யப்பட்ட கால்நடை தீவன ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற லாலு பிரசாத் யாதவை, பி. சுதர்சன் ரெட்டி சமீபத்தில் தனிப்பட்ட முறையில் சந்தித்தது வருத்தமளிக்கிறது’ என்று உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர்கள் உட்பட 25 சட்ட வல்லுநர்கள் கொண்ட குழு ஒரு கூட்டு அறிக்கையில் கடுமையாக விமர்சனம் செய்துள்ளது. (ஐ)

# சிறகு முளைத்த பெண்கள்!



சாதனை படைத்தவர்களாக அல்லது முதன்மையானவர்களாக பல்வேறு துறைகளிலும் அடையாளப்படுத்தப்படுகிற பெண்கள்பலரும்தொடக்கத்தில் எல்லோரையும்போல சமூகம் வகுத்து தந்த எல்லைக்குள் சாமானியமானவர்களாக இருந்த பெண்கள்தான். மாறாக ஒரு பெண் எப்போது சாதனையாளராக அறியப்படுகிறாள் என்று நோக்கினால் , தன் துறையில் முன்னேற ஒரு பெண் எதிர் கொள்கிற பிரச்சினைகளும் கடந்து வருகிற தடைகளுமே அவளை உள்ளூர வலிமையாக்குகிறது. வலிகளைத் தாங்கிக்கொண்டு தன் வழியில் அயராது முன் நடக்கிற பெண்தான் சமூகத்தில் சாதனை செய்தவளாக தனித்து ஒளிர்கிறாள்.

சாதித்த பெண்கள் பற்றிய ஒரு பொதுவான பார்வை இது. உண்மையில் சாதாரணப்பெண் ஒருத்தி, அவள் வாழ்கிற சூழல் வழியாக எதிர்கொள்கிற சவால்களைக் கண்டு திகைத்து , திணறி தடுமாறி, ஒரு கட்டத்தில் அவற்றை முழுமையாக எதிர்கொண்டு தன்னைத் தானே செதுக்கிக்கொள்ளத் தொடங்குகிறாள். அவ்வாறாக அவள் தாங்கிக்கொள்கிற அந்த வலிதான் அவளை சாதனைப்பெண்ணாக அடையாளப்படுத்துகிறது. வெற்றிபெற்ற அனைத்துப் பெண்களின் மென்மையான புன்னகைக்குள்ளும் ஆயிரமாயிரம் துயரக் கதைகள் மறைந்திருக்கிறது.

இந்தச்சமூகம் முன்னேறிவிட்டதாக, பெண்கள் எல்லோரும் கல்வியில் தேர்ந்தவர்களாகவும் பொதுவெளியில் தங்கள் அறிவையும் ஆற்றலையும் தடையேதுமின்றி வெளிப்படுத்துகிற சூழல் நிலவுவதாகவும் நாம் சொல்லிக்கொண்டிருந்தாலும், உண்மை நிலை வேறாகத்தான் இருக்கிறது. பெண்கள் பலரும் பாலின அடிப்படையில் தாங்கள் திறமையற்றவர்களாக மதிப்பிடப்படுகிற அவமதிப்பை பல்வேறு சந்தர்ப்பங்களில் சந்தித்துக்கொண்டே இருக்கிறார்கள்.





அலுவலக மேசையில் அமர்ந்தபடி கண்ணில் தூசி விழுந்துவிட்டதாக கண்ணீரை மறைத்துக்கொள்கிற பெண்களைப் பார்த்திருப்போம். ஒரு பெண்ணின் கண்ணீரைப் காணாத அடுப்படியோ குளியலறையோ இருக்காது என்று சொல்வதுபோலவே எல்லா அலுவலத்திலும் ஒதுங்கிய மூலையில் அமைந்திருக்கும் கழிவறையும் பெண்களின் கண்ணீரை அறிந்தே இருக்கிறது. பெண்களின் கைப்பையில் தவறாமல் இடம்பெறுகிற கண்ணாடியும் முகப்பவுடரும் அவர்களின் அழகை மெருகூட்டிக்கொள்வதற்காக மட்டுமல்ல என்பதை பெண்கள் மட்டுமே அறிவார்கள். பெண்களின் கண்ணீர்க்கு எப்போதும் ஒரேயொரு அர்த்தம் இல்லை. எல்லோரிடமும் அவள் அழுவதும் இல்லை. பெரும்பாலான பெண்கள் கோபத்தில், ஆத்திரத்தில் அல்ல இயலாமையில்தான் அழவே செய்வார்கள்.

ஒரு அலுவலகத்தில் பணிபுரிகிற ஆண் கவனமின்மையினால் ஏதேனும் தவறு செய்தால் அதனை அவன் கையாளுகிற விதத்திற்கும் அதே தவறை ஒரு பெண் செய்யும்போது அவள் கையாளுகிற விதத்திற்கும் மிகப்பெரிய இடைவெளி இருக்கிறது. ஒரேவிதமான தவறை செய்தவர்களை ஆண், பெண் பாலின இடைவெளியுடன்தான் அந்த அலுவலகத்தின் மேலதிகாரிகளும், சமூகமும்கூட அணுகுகிறது.

பெண்கள் என்றால் வீட்டு வேலை செய்யவும், குழந்தை பெற்றுக்கொள்ளவும், குழந்தைகளின் வீட்டுப்பாடத்தைச் செய்து கொடுப்பதற்கும் மட்டுமே ஆனவள் என்கிற கருத்து இன்னமும் ஆழமாக வேரூன்றியிருக்கிறது. இதனைக் கடந்து பெண்கள் செய்யக்கூடிய வேலைகள் என்று கல்வி, மருத்துவம் மற்றும் சில துறைகளைச் சொன்னாலும் பொதுவில் ஒன்றாக ஒரு பெண் இருக்கும்வரை அவளுக்கு எந்தச்சிக்கலும் இல்லை. ஆனால் ஒரு முக்கியமான பொறுப்பைக் கையில் எடுக்கும்போதும், சவாலான ஒரு புதிய வேலையை ஏற்றுக்கொள்ளும்போதும், அவள் சந்திக்கிற விமர்சனங்கள்தான் இந்தச் சமூகத்தின் ஒட்டு மொத்த மனோபாவமாக வெளிப்படுகிறது. ஒரு பெண்ணின் வெற்றி சமூகத்தின் பார்வையில் இன்னமும் மதிப்புக்குறைவானதாகவே இருக்கிறது. உண்மையில் இதனை எதிர்கொள்வதுதான் இன்றைய பெண்களுக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கிறது.

இத்தனையும் கடந்து தொழில், நிர்வாகம், கலை மட்டுமன்றி சமூகம், அரசியல் உட்பட பல்வேறு செயல்பாடுகளில் பெண்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இச்சமூகத்தின் ஒட்டுமொத்தக் கூட்டத்திலிருந்து தனித்து ஒளிர்கிற பெண்கள்தான் சிறகு முளைத்த பெண்களாக பறக்கத் தொடங்கியவர்கள். இவ்வாறான பெண்கள்தான் இச்சமூக வரலாற்றின் கடந்த காலப் பக்கங்களில் இருந்து பெயரற்றுப் போய்விடாமல், சிறகு முளைத்த பறவைகளென நம்பிக்கையின் விதைகளை நிலமெங்கும் விதைத்தபடியே செல்கிறார்கள். ஒவ்வொரு விதையும் விருட்சமாக மாறி இன்னும் பல பறவைகளுக்கு அடைக்கலம் தந்து கானகமாக உருவாக வழி செய்கிறது.



# பிரான்ஸ் அரசு கவிழ்ந்தது: நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் தோல்வி



பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் ஃபிரான்சுவா பேரூ தோல்வியடைந்த நிலையில், அவரது தலைமையிலான அரசு கவிழ்ந்தது. பிரான்ஸ் நாட்டின் அதிபராக மேக்ரோன் பதவி வகிக்கிறார். இவர் கடந்த 2024 ஜூன் மாதம் பார்லியை கலைத்து விட்டு தேர்தல் நடத்த உத்தரவிட்டார். அதன்படி தேர்வு செய்யப்பட்ட பார்லியில், முதலில் கேப்ரியல் அட்டல் பிரதமராக பதவி வகித்தார். அவர் 2024 செப்டம்பரில் ராஜினாமா செய்த நிலையில், மைக்கேல் பார்னியர் பிரதமராக நியமிக்கப்பட்டார். அவர், நம்பிக்கை இல்லா தீர்மானத்தில் தோல்வி அடைந்த நிலையில், மூன்றாவது பிரதமராக பிராங்காய்ஸ் பதவியேற்றார்.

இப்படி 9 மாதங்களுக்கு முன் பதவிக்கு வந்த பிராங்காய்ஸ் பேரூவுக்கு இப்போது சிக்கல் ஏற்பட்டுள்ளது. அரசின் கடன்களை எதிர்கொள்ள அவர் முன்மொழிந்த சிக்கனமான நிதிக் கொள்கைக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்த சூழலில், தனக்கான ஆதரவை நிரூப்பிக்க நம்பிக்கை வாக்கெடுப்பை மேற்கொண்டார் பேரூ. பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் மொத்தம் 577 உறுப்பினர்கள் உள்ள நிலையில், நம்பிக்கை வாக்கெடுப்பில் பேரூக்கு எதிராக 364 உறுப்பினர்களும், ஆதரவாக 194 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.19 உறுப்பினர்கள் வாக்கெடுப்பை புறக்கணித்தனர்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் பிராங்காய்ஸ் பாய்ரு எதிராக பெரும்பான்மை எம்.பி.க்கள் வாக்களித்ததால், பிரதமர் பதவியை பிராங்காய்ஸ் பேரூ தற்போது ராஜினாமா செய்துள்ளார். இதுவரை பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரோன் ஆட்சியில் 4 முறை பிரதமர்கள் ராஜினாமா செய்துள்ளனர். இப்போது புதிய பிரதமரை கண்டறிந்து பதவியேற்கச் செய்ய வேண்டிய நெருக்கடி அதிபர் மேக்ரோனுக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த 12 மாதங்களில் 4வது பிரதமரை தேர்ந்தெடுக்கும் சூழல் அங்கு உருவாகியுள்ளது. (ஐ)

## ராணுவக் காவலில் உள்ள ஆங் சான் சூகி கவலைக்கிடம்



மியான்மரில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளரான ஆங் சான் சூகி, கடந்த 2021 முதல் அந்நாட்டின் ராணுவ ஆட்சியாளர்களால் சிறை வைக்கப்பட்டுள்ளார். ஊழல் மற்றும் தேர்தல் மோசடி குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. இதற்காக, அந்நாட்டு நீதிமன்றம் அவருக்கு 27 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

இந்நிலையில், தனது தாய் ஆங் சான் சூகி இதய பாதிப்பால் அவதிப்பட்டு வருவதாகவும், அவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அவரது மகன் கிம் அரிஸ் தெரிவித்துள்ளார். லண்டனில் உள்ள கிம் அரிஸ் தொலைபேசியில் தெரிவித்ததாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், "எனது அம்மாவுக்கு 80 வயதாகிறது. ஒரு மாதத்துக்கு முன்பு, ஒரு இருதய நோய் நிபுணரைப் பார்க்க அவர் கோரி உள்ளார்.

அவரது கோரிக்கை ஏற்கப்பட்டதா என்பது குறித்து தகவல் இல்லை. அவர் உயிரோடுதான் இருக்கிறாரா என்பதையும் உறுதிப்படுத்த முடியவில்லை. ஆங் சான் சூகி உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் மியான்மர் அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும்' என தெரிவித்துள்ளார். கிம் அரஸின் இந்த குற்றச்சாட்டு குறித்து பதில் அளித்துள்ள ராணுவ செய்தித் தொடர்பாளர் ஜாவ் மின் துன்,'ஆங் சான் சூகியின் உடல்நிலை நன்றாக இருக்கிறது' என்று தெரிவித்துள்ளனர். (ஐ)



## உக்ரைனில் முக்கிய அரசு கட்டங்கள் மீது ரஷ்யா தாக்குதல்

ரஷ்யா - உக்ரைன் இடையே 3 ஆண்டுகளாக நடந்துவரும் போரை நிறுத்துவதற்கு அமெரிக்கா மேற்கொண்ட அமைதி முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. இந்நிலையில் கீவ் மீது ரஷ்யா மிகப்பெரிய வான்வழித் தாக்குதலை நேற்று முன்தினம் நடத்தியுள்ளது. சுமார் 800 டிரோன்கள் மூலமாக அடுக்குமாடி கட்டிடங்கள் தாக்கப்பட்டதில் 4 பேர் உயிரிழந்தனர்.

மேலும் முக்கயி அரசு அலுவலக கட்டிடங்கள் இந்த தாக்குதலில் சேதமடைந்துள்ளது. ஒரு நூற்றாண்டுக்கு முன் கட்டப்பட்ட மிக பழமைவாய்ந்த அரசு கட்டிடத்தை ரஷ்யா தாக்கியது இதுவே முதல் முறையாகும். தூதர்களுக்கு வழங்கப்பட்ட சுற்றுப்பயணத்தின்போது சேதமடைந்த கட்டிடங்களை அதிகாரிகள் காட்டினார்கள். (ஐ)

## ஜெருசலேமில் பஸ் மீது துப்பாக்கி சூடு: 6 பேர் பலி, 15 பேர் காயம்

ஜெருசலேமில் பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்தவர்கள் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் பலியானார்கள். மேலும் 12 பேர் காயமடைந்தனர். ஜெருசலேமில் அமைந்துள்ள யூத குடியிருப்புக்களுக்கு செல்லும் சாலையில், வடக்கு நுழைவாயிலில் நேற்று காலை பஸ் நிறுத்தத்தில் நின்றிருந்தவர்கள் மற்றும் அங்கிருந்த பேருந்து மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. பாலஸ்தீனியர்கள் நடத்திய இந்த தாக்குதலில் 6 பேர் பலியானார்கள்.

மேலும் குறைந்தது 12 பேர் காயமடைந்தனர். மேலும் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். துப்பாக்கி சூடு நடந்த இடத்தில் இருந்த ஒரு வீரர் உட்பட இரண்டு பேர் தாக்குதல் நடத்தியவர்களை சுட்டுக்கொன்றதாக போலீசார் தெரிவித்துள்ளனர். துப்பாக்கி சூடு நடந்த இரண்டு மணி நேரத்துக்கு பின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சம்பவ இடத்திற்கு வந்தார்.

துப்பாக்கி சூட்டை அடுத்து நூற்றுக்கணக்கான பாதுகாப்பு படை வீரர்கள் அங்கு குவிக்கப்பட்டனர். வேறு யாரேனும் அங்கு பதுங்கி உள்ளனரா அல்லது வெடிப்பொருட்கள் ஏதேனும் புதைக்கப்பட்டுள்ளதா என்று சோதனை நடத்தினார்கள். இந்த சம்பவத்துக்கு ஹமாஸ் பொறுப்பேற்கவில்லை. எங்கள் மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பு குற்றங்களுக்கான இயற்கையான பதில் என்று பாராட்டியுள்ளது (ஐ)

## மக்கள் போராட்டம் இந்தோனேசிய அமைச்சர்கள் 5 பேர் நீக்கம்

இந்தோனேசியாவில் பொருளாதார மந்தநிலை நிலவுகிறது. அங்கு மக்களின் சராசரி வருமானம் இந்திய ரூபாய் மதிப்பில் ரூ.17 ஆயிரமாக உள்ளது. அங்கு உள்ள எம்பிக்களுக்கு சுமார் ரூ.5 லட்சம் வரை சம்பளம் வழங்கப்படுகிறது. இதனை எதிர்த்து மக்கள் போராட்டம் வெடித்தது.

சமீபத்தில் இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் இந்தப் போராட்டம் தொடங்கியது. இந்தோனேசிய நாடாளுமன்றத்த முற்றுகையிட்ட பொது மக்கள், எம்பி.க்கள் சம்பளத்தைக் குறைக்க வேண்டும் என்று கோஷங்கள் எழுப்பினர். போராட்டத்தின் போது அரசு கட்டிடங்களுக்கு தீ வைப்பு என வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்தன.

இதில் 7 பேர் உயிரிழந்தனர். அதை தொடர்ந்து எம்பிக்களின் வீடுகளில் கொள்ளை சம்பவங்கள் நடந்தன. இந்த சம்பவங்களை தொடர்ந்து, இந்தோனேசிய அதிபர் பிரபோவோ சுபியாந்தோ தனது அமைச்சரவையை நேற்று மாற்றி அமைத்துள்ளார். நிதியமைச்சர் உட்பட 5 அமைச்சர்கள் தங்கள் பதவியை இழந்துள்ளனர். (ஐ)



## பம்பலப்பிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுமதிக்கப்பட்டதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

பலப்பிட்டிய, மஹலதுவ பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

குறித்த நபர், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த கிரிக்கெட் வீரர் தம்மிக்க நிரோஷனவின் கொலையில் பிரதான சந்தேகநபர் ஒருவர் எனவும் இது தொடர்பாக இடம்பெற்ற வழக்கில் பலப்பிட்டிய நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (9) முன்னிலையாகி வாடகைக்கு எடுக்கப்பட்ட முச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த நபர் மீது துப்பாக்கி சூடு நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

## ராஜிதவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜித சேனாரத்ன பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம, ரூ. 50,000 ரொக்கப் பிணையிலும் தலா 2 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள மூன்று பிணைகளிலும் பிணை வழங்கினார். சேனாரத்னவுக்கு வெளிநாட்டுப் பயணத் தடையையும் நீதவான் விதித்தார்

## 2026...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# இலங்கையில் தீவிரமடையும் ஐஸ் போதைப் பொருள் வியாபாரம்!

ஐஸ் போதைப்பொருள் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலே நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதாக தம்பர அமில தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பௌத்த தேரர்கள் கூட்டிணைந்து இன்று நடத்திய மாநாட்டின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை குறிப்பிட்டார்.

ஐஸ் போதைப் பொருள் தயாரிப்பதற்கான இரசாயனங்கள்கொண்டு வரப்பட்டமைமற்றும் ஒரு நாளில் நான்கு துப்பாக்கி பிரயோகங்களில் நால்வர் கொல்லப்படுவது போன்றவற்றை நாம் இதற்கு முன்னர் பாரத்ததில்லை.

ஐஸ் போதைப்பொருள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றால் போதைப் பொருள் பாவனையாளர்கள் பைத்தியம் பிடித்து திரிய வேண்டும். அல்லது போதைப் பொருள் இல்லாத நிலையில் தனது கைகளை வெட்டிக் கொண்ட சம்பவங்கள் நடந்திருக்க வேண்டும்.

மேலும் சிறைச்சாலைகளில் கூட அவ்வாறான சம்பவங்கள் நடக்கவில்லை. அவர்களுக்கு போதைப் பொருள் கிரமமாக கிடைக்கிறது. போதைப் பொருள் விநியோகம் நிறுத்தப்படவில்லை.

திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பல்களின் பின்னால் அரசியல்வாதிகள் இருப்பதாக கூறுகின்றனர். அப்படியென்றால் இப்போது அதன் செயற்பாடுகள் குறைவடைய வேண்டும். அவ்வாறு நிகழ்ந்ததாக தெரியவில்லை.

மொட்டுக் கட்சியினர் தான் போதைப் பொருள் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கும் அரசாங்கம், தங்களின் கையை விட்டுப்போன உள்ளூராட்சி மன்றங்களின் பலத்தை நிலைநிறுத்த கூட்டு சேர்ந்துள்ளனர்.

அதனால் கடந்த காலங்களில் போதைப் பொருள் விநியோகத்தில் வேறு ஒரு தரப்பு சம்பந்தப்பட்டிருந்தனர். இன்று இவர்கள் அதை கொண்டு செல்வதாகவே எமக்கு தோன்றுகிறது என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# அரசியல் சார்பு கலாசாரத்தை அரசாங்கம் முடிவுக்கு கொண்டு வந்துள்ளது: பிமல் ரத்நாயக்க



அரசியல் சார்பு கலாசாரத்தை அரசாங்கம் முடிவுக்கு கொண்டு வந்துள்ளதென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 704 ஊழியர்களுக்கு நிரந்தர நியமன கடிதங்களை வழங்கும் நிகழ்ச்சியில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இப்போது நடைபெறும் அனைத்து நியமனங்களும் கட்சி, இனத்திற்குப் பிணைக்கப்படாமல் சமமான முறையில் வழங்கப்படுகிறது.

கடந்த காலத்தில் அரசாங்கங்கள் ஆட்சேர்ப்புகளில் அரசியலை திணித்து பொதுமக்களின் பணத்தை வீணடித்தன. செப்டம்பர் 21 ஆம் திகதி மக்கள் வழங்கிய ஆணை நாட்டை புதிய பாதையில் நகர்த்தியது.

ஊழல் நிறைந்த காலம் முடிந்து, சமத்துவம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு உறுதியான அரசாங்கம் உருவாகியுள்ளது.

அரசாங்கம், தொழில் பாதுகாப்பை உறுதி செய்யும், இதன் மூலம் குடிமக்கள் நாட்டின் நலனுக்கு, கூட்டு முன்னேற்றத்தில் பங்களிக்க வேண்டும்" எனவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். (ஐ)

# "இலங்கையில் இருந்து இலவங்கம் இனி வாங்க மாட்டோம்"





இலங்கை அரசு தமிழக மீனவர்களின் படகுகளை சேதப்படுத்தி துன்புறுத்தினால் இலங்கையில் இருந்து வரும் இலவங்கம் உள்ளிட்ட எவ்வித பொருட்களையும் வாங்க மாட்டோம் என வர்த்தக நல சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சேலம் செவ்வாய்பேட்டை மளிகை வர்த்தக நல சங்கத்தின் 101 வது பொதுக்குழு கூட்டம் திங்கட்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு சங்கத்தின் தலைவர் S.C.நடராஜன் தலைமை தாங்கினார், பொதுக்குழு கூட்டத்தில், சங்கத்தின் செயலாளர் தர்மலிங்கம் ஆண்டறிக்கை வாசித்தார்.

இந்த கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீர்மானம் குறித்து சங்கத்தின் தலைவர் நடராஜன் கூறுகையில், இலங்கை அரசு தமிழக மீனவர்களின் 30 படகுகளை அடித்து உடைத்து சேதப்படுத்தியுள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் தொடரும் பட்சத்தில், இலங்கையிலிருந்து இலவங்கம் உள்ளிட்ட பொருட்களை வாங்க மாட்டோம்.

பன்னாட்டு நிறுவனங்களின் வணிகம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. இது சில்லறை வணிகத்தினரை வெகுவாக பாதிக்கிறது. எனவே இதனை ஒழுங்குப்படுத்த மத்திய அரசு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் அன்றாடம் உபயோகிக்கும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் தாறுமாறாக உயர்வதற்கு தமிழக அரசு பொறுப்பல்ல என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ் நாட்டுக்கு தேவைப்படும் உளுந்து ஆந்திராவில் இருந்தும், துவரை கர்நாடகாவில் இருந்தும் , கடலை உள்ளிட்ட பயறு வகைகள் மத்திய பிரதேசம் மற்றும் உத்தரப்பிரதேசத்தில் இருந்தும் , பூண்டு மகாராஷ்டிராவில் இருந்தும் வருவதால் இந்த பொருட்களின் விலை ஏற்றத்திற்கு தமிழக அரசோ, தமிழக வணிகர்களோ பொறுப்பு ஏற்க முடியாது என்றும் தீர்மானம் வாசிக்கப்பட்டது.

திருமண வாழ்விலே பொன் விழா கண்ட முதலமைச்சர் அவர்களுக்கும் அவரது மனைவியாருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் வணிகர் சங்க நிர்வாகிகள் கோபாலகிருஷ்ணன், கோகுல், ராஜேஷ்குமார், சீனிவாசன், சாந்திலால் ஜெயின் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் சங்க உறுப்பினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். (ஐ)

# பிரபல ஹோட்டலுக்கு சீல்





மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு நகரில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற முறையில் உணவு பொருட்களை தயாரித்து விற்பனை செய்த பிரபல ஹோட்டல் ஒன்றை இரு தினங்களுக்கு மூடி சீல் வைக்க மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சுதர்சனி உத்தரவிட்டுள்ளார்

மட்டக்களப்பு நகரில் உள்ள குறித்த உணவு விற்பனை நிலையத்தின் மீது பொதுமக்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ் முரளீஸ்வரனின் பணிப்புரையின் பேரில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ டாக்டர் இ.உதயகுமாரின் வழிகாட்டலில் கோட்டைமுனை பொது சுகாதார பரிசோதகர் ரி. மிதுன்ராஜ் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர்கள் குறித்த ஹோட்டலை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியபோது மனித பாவனைக்கு உதவாத பெருமளவிலான உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன

மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற முறையில் உணவு தயாரித்தல், மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்தல் உட்பட ஐந்து குற்றச்சாட்டுகளுக்கமைய குறித்த ஹோட்டல் மீது வழக்கு தாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறித்த ஹோட்டல் உரிமையாளருக்கு 45 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

இரு தினங்களுக்கு ஹோட்டலை சீல்வைத்து மூடுமாறும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ சுதர்ஷினி உத்தரவிட்டுள்ளதுடன் நீதிமன்ற உத்தரவின் பேரில் குறித்த ஹோட்டல் பொது சுகாதார பரிசோதகர்களினால் திங்கட்கிழமை(8) மாலை சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

இரு தினங்களின் பின்னர் ஹோட்டல் உரிமையாளர் ஹோட்டலை தூய்மைப்படுத்தி மனித நுகர்வுக்கு பொருத்தமான முறையில் உணவு தயாரிக்கும் இடமாக மாற்றி அமைத்தால் மாத்திரம் மீண்டும் ஹோட்டலை திறப்பதற்கான அனுமதியை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வழங்குவார்கள் என கோட்டைமுனை பொது சுகாதார பரிசோதகர் ரி. மிதுன்ராஜ் மேலும் தெரிவித்தார்

குறித்த ஹோட்டல் உரிமையாளர் மீதான வழக்கு எதிர் வரும் 12ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.09.2025 வெளியிடப்பெற்றது.